

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்



THE WORD OF CHRIST

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல
ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக
*கொலோசெயர் 3 : 16*

மரம் 1 நவம்பர் 2000 கனி 1

ஆசிரியர்
B. அர்ஜூனன்

படிப்போம் கிறிஸ்துவின் வசனம் ! செல்வோம் பரலோகம் !!

## ஆசிரியர் கடிதம்

*வாசகர்களுக்கு,*

தமிழகத்தில் மாவட்டவாரியாக நமது 'The Word of Christ'மாத இதழ் பற்றிய கருத்தரங்கமும் அதைத் தொடர்ந்து கிறிஸ்துவின் சுவிசேஷ கூட்டமும் நடத்த திட்டமிட்டு உள்ளோம்.

இதற்கு ஒத்துழைப்புத் தரக்கூடிய வாசகர்கள் தேவை. உங்கள் மாவட்டத்தில் நீங்கள் இருக்குமிடம் மற்றும் பஸ்வழி தடம் உட்பட அனைத்து விபரங்களுடன் கடிதம் அல்லது போன் மூலம் தொடர்பு கொள்ளவும்.

*"நான் என் சீஷரோடுகூடப் பஸ்காவைப் புசிக்கிறதற்குத் தகுதியான இடம் எங்கேயென்று போதகர் கேட்கிறார்."* *(மாற்கு 14 : 14)*

நீங்கள் இடம் கொடுப்பீர்களா ?

தொடர்புக்கு :
**B. Arjunan,** Editor
P.O. Box : 5, Batlagundu 624202.
Dindigul Dist, Tamilnadu, India. ✆ : 04543 - 23278

அன்புடன்
ஆசிரியர்

**இதழின் உள்ளே . . .** **பக்கம்**

1. தேவனோடே ஒப்புவாகுங்கள் 1
2. சரியான சபை எது 4
3. மீன் வாயில் கிடைத்த வெள்ளிப்பணம் (சிறுவர் பகுதி) 7
4. கிறிஸ்து ஏன் நமக்காக மன்றாட வேண்டும் 8
5. பெண்கள் பகுதி 11
6. ஒரு வழி பாடம் 13
7. தெரிந்து கொள்ளுங்கள் 18
8. படங்களும், சுருக்கமான வர்ணணைகளும் 19
9. புதிய ஏற்பாடு புத்தகங்களுக்கு குறிப்புகள் 20
10. நடப்பு செய்திகள்

FOR FREE DISTRIBUTION

Published by
**WORLD LITERATURE PUBLICATIONS**
POST BOX No. 5, Batlagundu - 624 202. SOUTH INDIA.

தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

**THE WORD OF CHRIST**

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் 1 **நவம்பர் 2000** கனி 1

ஆசிரியருரை



# தேவனோடே ஒப்புரவாகுங்கள்

## BE YE RECONCILED TO GOD

*மனிதன் பாவத்தின் விளைவாக தேவனிடமிருந்து பிரிக்கப்பட்டான். பாவம் மனிதனுடைய இச்சையினால் அவனை ஆட்கொண்டது. தேவனாகிய கர்த்தர் பாவம் செய்த மனிதனை அப்படியே விட்டுவிடாமல் பாவத்திலிருந்து மீட்டு, அவனை தம்மோடு ஒப்புரவாக்கிக் கொள்ள அவருக்கு பிரியமாயிற்று. "அதென்னவெனில், தேவன் உலகத்தாருடைய பாவங்களை எண்ணாமல், கிறிஸ்துவுக்குள் அவர்களைத் தமக்கு ஒப்புரவாக்கி, ஒப்புரவாக்குதலின் உபதேசத்தை எங்களிடத்தில் ஒப்புவித்தார்". (2 கொ. 5 : 19).*

*மனிதன் உண்டான விதத்தை பலர் பலவிதமாக அவர்களுடைய அறிவைப் பயன்படுத்தி பேசுகிறார்கள். தேவன் மனிதர்களுக்குக் கொடுத்த பரிசுத்த வேதாகமத்தில், மனிதன் எப்படி சிருஷ்டிக்கப்பட்டான் என தெளிவாக பார்க்க முடிகிறது. "தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனுஷன் ஜீவாத்துமாவானான் " (ஆதி. 2:7). இப்படி தேவனால் அவரது சாயலில் சிருஷ்டிக்கப்பட்ட மனிதன் தன் இச்சையினால் பாவம் செய்து தேவனிடமிருந்து பிரிக்கப்பட்டான்.*

*நம்முடைய முற்பிதாக்களின் காலத்தில் இஸ்ரவேல் மக்களை மோசே என்ற ஒரு தேவ மனிதன் வழி நடத்திச் சென்றான். அப்பொழுது அந்த மக்கள் "தேவனுக்கும் மோசேக்கும் விரோதமாகப் பேசி : நாங்கள் வனாந்தரத்திலே சாகும்படி நீங்கள் எங்களை எகிப்து தேசத்திலிருந்து வரப்பண்ணினதென்ன? இங்கே அப்பமும் இல்லை, தண்ணீரும் இல்லை; இந்த அற்பமான உணவு எங்கள் மனதுக்கு வெறுப்பாயிருக்கிறது என்றார்கள். அப்பொழுது கர்த்தர் கொள்ளிவாய்ச் சர்ப்பங்களை ஜனங்களுக்குள்ளே அனுப்பினார்; அவைகள் ஜனங்களைக் கடித்ததினால் இஸ்ரவேலருக்குள்ளே அநேக ஜனங்கள் செத்தார்கள். அதினால் ஜனங்கள் மோசேயினிடத்தில் போய்: நாங்கள் கர்த்தருக்கும் உமக்கும் விரோதமாய்ப் பேசினதினால் பாவஞ்செய்தோம்; சர்ப்பங்கள் எங்களை விட்டு நீங்கும்படி கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணவேண்டும் என்றார்கள்; மோசே ஜனங்களுக்காக விண்ணப்பம் பண்ணினான். அப்பொழுது கர்த்தர்*

மோசேயை நோக்கி : நீ ஒரு கொள்ளிவாய்ச் சர்பத்தின் உருவத்தைச் செய்து, அதை ஒரு கம்பத்தின் மேல் தூக்கிவை; கடிக்கப்பட்டவன் எவனோ அவன் அதை நோக்கிப் பார்த்தால் பிழைப்பான் என்றார்" (எண். 21 : 5-8).

அப்படியே இன்றும் அநேகர் பாவத்தினால் கடிபட்டு பாவத்திற்கு அடிமையாகி விடுகிறார்கள் பலர் மரித்தும் போய் விடுகிறார்கள். அன்று மோசேயின் மூலமாக, கடிபட்ட மக்களை காப்பாற்றிய தேவன் இன்று இயேசு கிறிஸ்துவை பாவபலியாக்கி சிலுவையில் உயர்த்தினார். அவரை நீங்களும் நானும் நோக்கி பார்த்து அவர் மூலமாக நாம் பாவமற கழுவப்பட்டு தேவனோடு ஒப்புரவாக வேண்டும். நம்முடைய முற்பிதாக்கள் மோசேயினிடத்தில் போய்; நாங்கள் கர்த்தருக்கும் உமக்கும் விரோதமாய்ப் பேசினதினால் பாவஞ்செய்தோம் என்று அறிக்கையிட்டு பாவங்களின் நிமித்தம் ஒப்புரவானார்கள். இன்று அநேகருக்கு தாங்கள் செய்வது தவறு என்று அறிந்து, அதனைப் போக்க, அதற்கான பரிகாரங்களை பல வகையில் தேடுகிறார்கள். அப்படி மேற்கொள்ளும் முயற்சி எல்லாம் மன திருப்தியே ஒழிய வேறொன்றுமில்லை. மனிதனுக்கு விரோதமாக பாவம் செய்திருந்தால் மனிதனிடத்தில் போய் ஒப்புரவாக வேண்டும். தேவனுக்கு விரோதமாக பாவம் செய்திருந்தால் தேவனோடு ஒப்புரவாக வேண்டும். மனிதனோடு ஒப்புரவாக கை குழுக்கி கொள்கின்றோம். தேவனோடு ஒப்புரவாக அவர் வைத்துள்ள நியதி "இயேசு கிறிஸ்துவைக் கொண்டு நம்மைத் தம்மோடே ஒப்புரவாக்கி" என (2 கொ. 5 : 18)ல் வாசிக்கின்றோம். ஆக நாம் தேவனோடு ஒப்புரவாக ஒரே வழி இயேசுகிறிஸ்துவே! "அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை" (அப். 4 : 12).

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து பாவத்தைப் போக்கும் பலியாக வந்தார். உலக முழுவதும் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறது என்பதை நாம் நன்கு அறிவோம். இப்படி பாவத்தின் வஞ்சனையினால் பிடிபட்டு உள்ள உலகத்தை மீட்கவும், நாம் மீண்டும் அவருடைய தற்சுரூபத்தை அடையவும், "நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்" (2 கொ. 5 : 21). அப்படியென்றால் கிறிஸ்து பாவம் செய்தாரா? "அவர் பாவஞ்செய்யவில்லை, அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை; அவர் வையப்படும்போது பதில் வையாமலும், பாடுபடும் போது பயமுறுத்தாமலும், நியாயமாய்த் தீர்ப்புச் செய்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்தார் நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, அவர்தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின் மேல் சுமந்தார்; அவருடைய தழும்புகளால் குணமானீர்கள்" (1 பேது. 2:22-24). நாம் பிழைக்கத்தக்கதாக, நம்முடைய பாவங்களை இயேசு தாமே தமது சரீரத்திலே ஏற்று சிலுவையின் மேல் சுமந்து தீர்த்தார். நாம் அடிக்கப்பட வேண்டிய இடத்தில் இயேசு அடிக்கப்பட்டார்.

ஒரு ஊரிலே ஒரு பெரிய கிணறு இருந்தது. அந்த கிணற்றிலே ஊரார் எல்லோரும் தண்ணீர் எடுப்பார்கள். அந்த ஊரில் உள்ள ஒருவருக்கும் நீச்சல் தெரியாது, ஒரு நாள் தண்ணீர் மொண்டு கொண்டிருந்த

ஒரு மனிதன் தன் கவனக்குறைவினால் தவறி கிணற்றுக்குள் விழுந்து விட்டான். இதை பார்த்த அந்த ஊரார் ஐயோ! அந்த மனிதன் கிணற்றுக்குள் விழுந்து விட்டானே, காப்பாற்ற யாருமே இல்லையா என்று ஒரே கூச்சலிட்டனர் அவர்களுடைய அலரல் சத்தத்தை கேட்டு வெளியூரிலிருந்து அங்கு வந்து கொண்டிருந்த ஒரு நபர் ஒரே குதியாக தன் ஜீவனையும் பாராமல் கிணற்றுக்குள் குதித்து தண்ணீரில் கொஞ்சம், கொஞ்சமாக மூழ்கிக் கொண்டிருந்த அந்த மனிதனை தூக்கி தன் தோல்மேல் மேல் போட்டுக் கொண்டு, அவனை சுமந்து கொண்டு நீந்தி கிணற்று ஓரமாக இருந்த படிகளில் ஏறி மேலே கொண்டு வந்தார். தன்னுடைய கவனக் குறைவினால் கிணற்றுக்குள் விழுந்த மனிதனை தன் ஜீவனையும் பாராமல் காப்பாற்றிய அந்த மனிதரை அந்த ஊரார் பாராட்டிய பாராட்டு கொஞ்சமல்ல. அதுபோல பாவத்தில் வீழ்ந்துபோய் யாராலும் காப்பாற்ற முடியா சூழ்நிலையில் இருந்த நம்மை ஆண்டவராகிய இயேசு காப்பாற்றினார். இவரை யோவான்; இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி" (யோ. 1:29) என்றான்.

ஆண்டவராகிய இயேசு கூறும் உவமையை இங்கு கவனியுங்கள்; ஒரு மனுஷனுக்கு இரண்டு குமாரர் இருந்தார்கள். அவர்களில் இளையவன் தகப்பனை நோக்கி : தகப்பனே, ஆஸ்தியில் எனக்கு வரும் பங்கை எனக்குத் தரவேண்டும் என்று சொல்லி வாங்கி புறப்பட்டு தூரதேசத்துக்குப்போய் துன்மார்க்கமாய் ஜீவனம் பண்ணி தன் ஆஸ்தியை அழித்துப்போட்டான். பின்பு அவன் குறைவுபடத் தொடங்கியபோது பன்றிகளை மேய்க்கும்படி வேலை செய்ய சென்றான். அவனுக்கோ பன்றிகள் தின்னும் தவிடுகூட கிடைக்காமல் பசியினால் காய்ந்தான். அப்பொழுது அவனுக்குப் புத்தி தெளிந்து, நான் எழுந்து என் தகப்பனிடத்திற்குப்போய் : தகப்பனே பரத்துக்கு விரோதமாகவும், உமக்கு முன்பாகவும் பாவஞ்செய்தேன் என்பேன் என்று சொல்லி தன் தகப்பனிடம் வந்தான். அவன் தகப்பன் அவனை கண்டு மனதுருகி ஓடி வந்து அவன் கழுத்தைக் கட்டிக் கொண்டு அவனை முத்தஞ்செய்தான் (லூக். 15 : 11-20). பார்த்தீர்களா! ஒப்புரவாகுதல் என்றால் இப்படித்தான். நாம் செய்த பாவங்களுக்காக மனந்திரும்பி, கீழ்படிந்து, கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெறும்போது தேவனோடு ஒப்புரவாகுதலில் இணைக்கப்படுவோம்.

"ஆனபடியினாலே, தேவனானவர் எங்களைக் கொண்டு புத்தி சொல்லுகிறது போல, நாங்கள் கிறிஸ்துவுக்காக ஸ்தானாபதிகளாயிருந்து, தேவனோடே ஒப்புரவாகுங்கள் என்று, கிறிஸ்துவினிமித்தம் உங்களை வேண்டிக் கொள்கிறோம்" (2 கொ. 5 : 20). கிறிஸ்து ஏன் பிரசங்கிக்கப் படுகிறார் என்றால், நீங்கள் தேவனோடு ஒப்புரவாக வேண்டும் என்பதற்காகத்தான். ஒருவேளை நீங்கள் சொல்லலாம் நான் தேவனோடு ஒப்புரவாகமாட்டேன் நடப்பது நடக்கட்டும் என்று, பிரிய நண்பா! "பாவத்தின் சம்பளம் மரணம்" (ரோ. 6 : 23) என வேதம் மிக தெளிவாக கூறுகிறது. இந்த அருமையான தருணத்தை பயன்படுத்தி தேவனோடு ஒப்புரவாகுங்கள்.

இதை வாசிக்கும் என் அன்பு சகோதரனே, சகோதரியே நீ தேவனோடு ஒப்புரவாகி உள்ளாயா? அப்படி இல்லை என்றால் இன்றே உன் பாவங்களுக்காக மனந்திரும்பி, "கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று

உன் இருதயத்திலே விசுவாசித்தல் இரட்சிக்கப்படுவாய்" (ரோ. 10 : 9). இதற்காக நீ உலகத்தில் கடை கோடிக்கு போக வேண்டிய அவசியமில்லை. நீ இருக்குமிடத்தில் பரிசுத்த வேதாகமத்தை தினமும் வாசித்து, அதை அறிந்து கொண்டு தேவனோடு ஒப்புரவாக்கப்பட்டால், நீ தேவனோடு நித்திய வாசஸ்தலமாகிய பரலோகத்தில் என்றென்றுமாய் ஜீவிப்பாய், கர்த்தர் தாமே உங்களை இயேசுகிறிஸ்து மூலமாய் ஒப்புரவாக்குவாராக..

# சரியான சபை எது?

# Which Church is correct?

J.C. Choate



கிறிஸ்து, தமது சபையைக் கட்டுவதாகக் கூறினார். அவர் கட்டிய அந்த ஒரே சபையைப் பற்றி வேதாகமம் மிகத் தெளிவாகக் கற்பிக்கிறது. (எபே. 4:4; கொலோ. 1:18) என்றாலும், இன்று உலகில் பல சபைகள் இருக்கின்றன. எனவே, வேதாகமம் கூறும் ஒரே சபையை ஒருவர் எப்படி அறிந்து கொள்ள முடியும் என்ற கேள்வி எழுகிறது.

இன்றுள்ள எல்லா சபைகளும் தாங்களே சரியான சபை என்றும், தேவனுடைய வார்த்தையின்படி ஏற்பட்ட சபை தங்களுடையதே என்றும் சவால் விடுகின்றன. ஆனால் கர்த்தர் ஒரு சபையைத் தான் உண்டாக்கினார் என்றால், அதைத் தவிர வேறு பிற சபைகள் எல்லாம் அவருக்குச் சொந்தமானவைகளாக இருக்க இயலாது. பிற அனைத்தும் மனிதனால் உண்டாக்கப் பட்டவைகளாகத்தான் இருக்க வேண்டும். எது சரியான சபை என்பதைத் தீர்மானிக்க, நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம், நான்கு எளிமையான கேள்விகளைக் கேட்டு சரியான பதில்களைப் பெற்றுக் கொள்ளுவது தான். நிறைய கேள்விகள் இருப்பினும், எது கர்த்தர் கட்டிய சபை, எவை போலியான மனித சபைகள் என்று நாம் அறிந்துகொள்ள நான்கு கேள்விகள் போதுமானது.

இக்கேள்விகளையும், வேதாகமம் அவற்றிற்குக் கூறும் பதில்களையும் இப்போது நாம் பார்க்கலாம்.

**1. யார் சபையை நிறுவினார்?** கிறிஸ்து சபையை நிறுவினார் என்பதை வேதாகமம் தெளிவாகக் கற்பிப்பதை நாம் எல்லோரும் ஏற்றுக் கொள்ளுகிறோம் என நான் நினைக்கிறேன். கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்பதாக பேதுரு அறிக்கை செய்தபின், அதற்குப் பதிலளிக்கும் வகையில், "மேலும் நான் உனக்குச் சொல்லுகிறேன். நீ பேதுருவாய் இருக்கிறாய், இந்தக் கல்லின் மேல் என் சபையைக் கட்டுவேன். பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்ளுவதில்லை" என்று கிறிஸ்து கூறினார்.

(மத்தேயு 16:18) இப்போது, சபையைக் கட்டுவதாக வாக்களித்தவர் கிறிஸ்து அப்படியானால் சபையைக் கட்டியது கிறிஸ்து தானே? ஆம் நிச்சயமாக மேலும், கிறிஸ்து சபையைக் கட்டுவதாகத் தான் கூறினார். சபைகளை அல்ல என்பதை நீங்கள் கவனியுங்கள் எனவே, அவர் ஒரே ஒரு சபையைக் கட்டினார், அது தமக்குச் சொந்தமானது என அறியும் படியாக என் சபை என்று அதைச் சொன்னார். தயவு செய்து இதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். ஏனெனில் சபை அவருடையதாக இருந்தால், அது உங்களுடையதோ அல்லது என்னுடையதோ அல்ல என்று தான் பொருள்.

**2. சபை நிறுவப்பட்ட இடம் எது?** அப்போஸ்தலருடைய நடபடிகள் 2ம் அதிகாரத்தின் பிரகாரம் சபையானது எருசலேமில் நிறுவப்பட்டது. அது நமக்கு எப்படித் தெரியும்? எப்படியென்றால் உன்னதத்திலிருந்து வரும் வல்லமையால் நிரப்பப்படும் வரை எருசலேமில் தங்கியிருங்கள் என அப்போஸ்தலர்களுக்கு கிறிஸ்து கட்டளையிட்டிருந்தார் (லூக்கா 24:49). அவர்களும் அவ்வாறே வல்லமை வரும் போது எருசலேமில் இருந்தார். (அப்.2:1-4) அது மட்டுமல்ல, ராஜ்யம் அல்லது சபை எருசலேமில் நிறுவப்படும் என்று ஏசாயா தீர்க்கதரிசி கூறினார். (ஏசாயா 2:2,3) மீகா தீர்க்கதரிசியும் கூறினார் (மீகா. 4:2).

**3. அது நிறுவப்பட்டது எப்போது?** அப்போஸ்தலருடைய நடபடிகள் 2ம் அதிகாரத்தில் நாம் காண்பது போல, சபையானது எருசலமில் கிறிஸ்துவால் நிறுவப்பட்டபடியால், அது ஏறக்குறைய கி.பி.33ம் ஆண்டில் தொடங்கிற்று. அதாவது கர்த்தரின் சபை கடந்த 2000 வருடங்களாக இருந்து வருகிறது.

**4. சபை என்ன பெயரைத் தரித்திருந்தது?** தனிப்பட்ட உறுப்பினர்கள் கிறிஸ்தவர்கள் என்பதாக அறியப்பட்டனர் (அப் 11:26; அப்.26:28; 1 பேதுரு 4:16). எல்லா கிறிஸ்தவர்களும் கூடி சபையாகிறது. சுவிசேஷத்தில் அது கிறிஸ்துவின் சரீரம் எனக் குறிப்பிடப்படுகிறது.(1 கொரி. 12:27)ன்படி சரீரமே சபையாகும் (கொலா 1:18) ஆகவே அது கிறிஸ்துவின் சபை. பவுலுடைய காலத்தில் பல இடங்களிலுமுள்ள பிராந்திய சபைகளையெல்லாம் சேர்த்து கிறிஸ்துவின் சபையார் என்று கூறப்பட்டது. (ரோமர் 16:16) சபையைக் கிறிஸ்து உண்டாக்கினார் என்றால், பின்னர் அவருடைய பெயரை சபை தரித்து கொள்ளுவதுதானே முறை? அது கிறிஸ்துவின் சபையில்லை என்றால் பின் யாருடைய சபை? அவருடைய பெயரைத் தரிக்காவிட்டால், அது கிறிஸ்துவின் சபையாக இருக்க இயலுமா? ஒரு போதும் முடியாது.

இவைகளே நான்கு எளிய கேள்விகளும் அவற்றிற்குரிய வேதாகப் பதில்களும் ஆகும். ஒரு சபை, கிறிஸ்துவின் சபையா, இல்லையா என்பதை அறிய நீங்கள் திகைத்துக் கொண்டிருப்பீர்களானால் பின் இந்தக் கேள்விகளைக் கேட்டு அவைகளுக்குப் பதில்களைக் கண்டு பிடித்தால் உண்மை விளங்கும் மனிதனால் உண்டாக்கப்பட்ட எந்த சபையும் தன்னை கிறிஸ்துவின் சபை என்று உரிமை கேட்க இயலாது. அது லண்டனிலோ, அமெரிக்காவிலோ அல்லது உலகத்தின் ஏதோ ஒரு நகரத்தில் தோன்றியிருந்தால், அது கிறிஸ்துவின் சபையாக எப்படி இருக்க முடியும்?

சில நூறு வருடங்களுக்கு முன் இது நிறுவப்பட்டிருந்தால், கர்த்தரின் சபையாக இருக்க அதற்கு வயது போதாது. இறுதியாக, மனிதன் உண்டாக்கிய ஒரு பெயரை அது தரித்திருந்தால், நிச்சயமாக அது ஒரு நாமகரண சபையாகத்தான் இருக்க முடியும். அப்படியானால் ஒரு சபை தேவனால் உண்டானதா! அல்லது மனிதன் உண்டாக்கினா! என்று சோதித்து பார்க்க இது சரியான ஒரு வழி, ஒரு அளவுகோல் - என்று நீங்கள் தெரிந்து கொள்ள முடியவில்லையா? இந்தப் பரிசோதனை ஒரு போதும் தோற்றுப் போனதில்லை.

ஒரே ஒரு காரியத்தைத் தவிர மற்ற எல்லாவற்றிலும் ஒரு சபையானது வேதாகமம் குறிப்பிடுவதைப் போல இருப்பதாக நீங்கள் கண்ட போதிலும், அது கர்த்தருடைய சபையாக இருக்க முடியாது. வேதாகமத்தின் ஒரே சபையாக அது இருக்க வேண்டுமானால்,வேதாகமத்தின் சகல போதனைகளுக்கும் அது பொருந்துவதாக இருக்க வேண்டும்.

எனது நண்பரே! நீங்கள் கிறிஸ்துவின் சபையில் ஒரு உறுப்பினரா? மேலே காணும் நான்கு கேள்விகளையும் கேட்டு, நீங்களே விடையைத் தெரிந்து கொள்ளுங்கள். அவ்வாறு நீங்கள் கேட்டு, ஒரு நாமகரண சபையில் நீங்கள் இருப்பதாகக் கண்டு கொண்டால், நீங்கள் உங்கள் வேதாகமத்தைக் கற்று, கர்த்தருக்குக் கீழ்ப்படிய உங்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். கவலை வேண்டாம். வேதாகமம் போதிப்பதின்படி நீங்கள் நடந்தால், கர்த்தர் உங்களை இரட்சித்து, அவருடைய சபையில் உங்களை சேர்த்துக் கொள்ளுவார். நிச்சயமாக, தவறான ஒரு சபையில் உங்களை அவர் சேர்க்க மாட்டார். அவருடைய சபையை அவர் அறிவார். அதில் மட்டுமே உங்களைச் சேர்ப்பார் (அப் 2:47) அதன்பின், வேதாகமத்தில் நீங்கள் படிக்கக் கூடிய சபையில் ஒரு உறுப்பினராக இருப்பீர்கள். அந்த சபையில் ஏன் இருக்கிறேன், இந்த சபையில் ஏன் இருக்கிறேன் என்பதாக நீங்கள் இனி விளக்கம் சொல்லிக் கொண்டிருக்கத் தேவையில்லை. ஏனெனில் கர்த்தரின் சபை ஒன்றே ஒன்றுதான். நீங்கள் அதில் மட்டுமே அங்கத்தினராக இருப்பீர்கள்.

**தமிழில் எஸ்.எஸ். ராஜன்**

---

## வேத அறிவுப் போட்டி எண் 3ன் விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 1. | பவுல் | – | 2 கொ. 4:2 |
| 2. | எலும்புகளை | – | நீதி. 15:30 |
| 3. | ஏலி | – | 1 சாமு. 3:14 |
| 4. | நேபுகாத்நேச்சார் | – | தானி. 4:37 |
| 5. | இரட்சிப்பென்று | – | 2 பேது. 3:15 |
| 6. | சம்கார் | – | நியா. 3:3 |
| 7. | அவரில் | – | 1 யோ. 2:29 |
| 8. | பவுல், பிலேமோனுக்கு | – | பிலே. 19 |
| 9. | வானமும், பூமியும் | – | லூக். 16:17 |
| 10 | சொப்பனம் | – | பிர. 5:3 |

## ஒத்துழைப்பு தருவீர்களா?

வாசகர்களுக்கு,



முகவரிகளை ஒழுங்குபடுத்தும் பணி நடைபெறுகிறது. ஆகையால் மாவட்டம், மற்றும் பின்கோடு குறிப்பிடாதவர்கள் உடனே ஒரு அஞ்சல் அட்டையில் உங்களுடைய முழு முகவரியை ஆங்கிலத்தில் எழுதி தெரியப்படுத்துங்கள். இந்த இதழின் கவரில் உள்ள உங்கள் Ref. No. யை குறித்து வைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் எங்களோடு தொடர்பு கொள்ளும் பொழுது அந்த எண்ணை பயன்படுத்தவும். நன்றி.

## வேத அறிவுப்போட்டி எண் 3ல் வெற்றிபெற்றவர்கள்

1. A. மேரியம்மாள் - வத்தலக்குண்டு
2. S. லலிதா பிரேமகுமாரி - மதுரை
3. A. கந்தசாமி - தெக்கலூர்
4. S. ஆனந்தராஜ் - சூரம்பட்டி
5. P. வினோத்குமார் - நாகலிங்கபுரம்
6. மெர்ஸிரூபி - S.V. புரம்
7. V. சாலமோன் - கோவில்பட்டி
8. M. நோயல்ராஜன் - சேலம்
9. S. வைலட் மெர்ஸி - வத்தலக்குண்டு
10. P. அலிஸ்மேரியம்மாள் - வத்தலக்குண்டு
11. A. கந்தசாமி - தெக்காலூர்
12. A. மைக்கேல்ராஜ்குமார் - திண்டுக்கல்
13. A. ராபர்ட் கிளைவ் - சிலுவத்தூர்
14. R. பெரியசாமி - சேஷூர்
15. S. கிறிஸ்டியான் - சென்னை
16. ஜார்ஜ் மேரி - கரூர்
17. N. ஜேக்கப் - கும்மிடிப்பூண்டி
18. D. ரூத்மேரி - கங்கானிமேடு
19. A. ஜோதிகாந்தம் - போடபாறை
20. V. ரவிமோகன்ராஜ் - குளத்தூர்
21. N. கமலவேணி - சென்னை
22. V. கோவலன் - மதுரை
23. J. நிர்மலாஜான் - மதுரை



# மீன் வாயில் கிடைத்த வெள்ளிப்பணம்

சிறுவர் பகுதி

வேதபகுதி : மத்தேயு. 17 : 24-27

வெள்ளிப்பணம் பார்த்திருக்கிறீர்களா ? பார்த்திருக்கமாட்டீர்கள். ராஜாக்களின் காலத்தில் வெள்ளிப்பணமும், தங்ககாசும் புழக்கத்தில் இருந்தது என வரலாற்று புஸ்தகங்களின் வாயிலாக நாம் அறிகிறோம். இப்பொழுதெல்லாம் காகிதத்தில் அச்சடிக்கப்பட்ட பணத்தையே அதிக அளவில் நாம் பயன்படுத்துகிறோம். மீன் வாயில் வெள்ளிப்பணம் எப்படி கிடைத்ததுங்க சார் அதைப்பற்றி சொல்லுங்க என்று உங்கள் வாயில் முணுமுணுப்பது என் காதில் விழுகிறது.

ஒரு முறை நம்முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து கப்பர் நகூமிற்கு வந்தார். அங்கு வரிப்பணம் வசூலிக்கிறவர்கள் பேதுருவைப் பார்த்து என்ன கேட்டாங்க தெரியுமா ! உங்கள் போதகர் வரிசெலுத்துகிறதில்லையா என்றாங்க, உடனே பேதுரு ஒ செலுத்துகிறாரே என்றான். இதிலிருந்து நமக்கு என்ன தெரிகிறது, ஆண்டவர் தவறாது வரிபணம் செலுத்தி வந்திருக்காரு இல்லையா ?

பின்பு பேதுரு இயேசுவைப் பார்க்க வீட்டிற்கு வந்தபோது அவன் வரி பணத்தைக் குறித்து பேசுகிறதற்கு முன்னமே ஆண்டவர் அவனை நோக்கி: சீமோனே என்றார் பேதுருவுக்கு மற்றொரு பெயர் சீமோன். பூமியின் ராஜாக்கள் தீர்வையையும், வரியையும் தங்கள் பிள்ளைகளிடத்திலோ, அந்நியரிடத்திலோ, யாரிடத்தில் வாங்குகிறார்கள் என்று கேட்டார். அதற்குப் பேதுரு அந்நியரிடத்தில் வாங்குகிறார்கள் ஆண்டவரே என்றான். அப்படியானால் பிள்ளைகள் அதைச் செலுத்த வேண்டுவதில்லையே ஆகிலும், நாம் மற்றவர்களுக்கு இடறலாயிராதபடிக்கு நீ கடலுக்குப்போய், தூண்டில்போட்டு முதலாவது அகப்படுகிற மீனைப் பிடித்து அதின் வாயைத் திறந்து பார் அதில் ஒரு வெள்ளிப்பணத்தைக் காண்பாய் அதை எடுத்து எனக்காகவும், உனக்காகவும் வரியாக அவர்களிடத்தில் கொடு என்றார். ஏன் பேதுருவை பார்த்து சொன்னாருனு தெரியுமா ? பேதுரு ஒரு மீனவனாயிருந்தான்.

என்ன ஆச்சரியம் பார்த்தீர்களா! “பிறனுக்குள்ள யாதொன்றையும் இச்சியாதிருப்பாயாக” என்று கட்டளை கொடுத்த ஆண்டவர் அந்த வரி பணத்தபோயி இச்சிப்பாரா ? சகல அதிகாரத்திற்கும் அவர் கீழ்படிந்திருந்தார், இல்லையா ஆகையால் பேதுருவை பார்த்து அந்த மீன் வாயில் இருக்கும் வெள்ளிப் பணத்தை எனக்காகவும் உனக்காகவும் செலுத்து என்றார்.

இன்றைக்கு நம்ம நாட்டில இருக்கிற அநேகர் வரிகொடுக்கிறதில்லை காரணம் என்னவென்று தெரியுமா ? ரோடு சரியில்ல, குழாயில தண்ணீர் வரல, இப்படி ஏதாவது சாக்குபோக்கு சொல்லி வரிகொடுக்கமாட்டாங்க. ஆண்டவர் என்ன சொல்றாரு “இராயனுடையதை இராயனுக்கும், தேவனுடையதைத் தேவனுக்கும் செலுத்துங்க” என்கிறாரு அப்பனா, நாம் வரி கொடுக்கிறது நியாயந்தானே. நாமபடிக்கும் பள்ளிகூடத்திலே கூட சிலவேளையில் பள்ளிக்கட்டணம் கேட்கிறாங்க நாம அந்த நிர்வாகத்த மதித்தா என்ன செய்யனு, உடனே மற்றவர்களுக்கு இடறலாக இல்லாதபடி பணத்தகொடுக்க வேண்டும். ஏன் என்றால் அது பள்ளிக்கு சேர வேண்டிய பணம் அதைக் குறித்து ஏன் ? எதற்கு ? என்று ஒரு போராட்டத்தையே ஆரம்பித்து விடகூடாது. ஆண்டவர் ஏதாவது கேட்டாரா உடனே பேதுருவுக்கு கட்டளையிட்டார். நாமும் அப்படியே செய்ய வேண்டும்.

**மனப்பாட வசனம் :**

“இராயனுடையதை இராயனுக்கும், தேவனுடையதைத்
தேவனுக்கும் செலுத்துங்கள்” *(மாற்கு 12:17)*

# கிறிஸ்து ஏன் நமக்காக மன்றாட வேண்டும்.

## WHY CHRIST INTERCEDES FOR US

***John Prabhudass***



அன்பு, கோபம், இரக்கம், நீடிய பொருமை, சாந்தம் தயவு ஆகிய குணங்களைப் போல பரிந்து பேசுதலும் ஒன்றாகும். கணவன் மனைவிக்கிடையே சண்டைகள், பிரச்சனைகள் வரும்போது அவர்களுக்கிடையே சமரசம் செய்ய பிள்ளைகள் பரிந்துப் பேசுவார்கள். பிள்ளைகள் தவறு செய்து தகப்பன் அடித்துவிட்டால் தாய் பிள்ளைகளுக்காகப்

பரிந்து பேசுவாள். கருத்து வேறுபாடுகளிக்கிடையே நடந்த பிரச்சனையில் இரு நபர்களோ, இரு பிரிவினரோ பிரிந்துவிட்டால், மூன்றாவது ஒரு நபர் வந்து அவர்களுக்காக பரிந்து பேசுவதும் இயற்கையான செயல். அந்த இரு நபரும், பிரிவினரும், மீண்டும் ஒன்றாக சேர்ந்தார்களா? இல்லையா, என்பது வேறு விஷயம். ஆனால் எப்படியோ ஒருவர் அவர்களுக்காக பரிந்து பேசுகிறார்.

இதைப்போல இயேசு கிறிஸ்துவும் ஒவ்வொரு கிறிஸ்தவ பிள்ளைகளுக்காக பரிந்து பேசுகிறார். கிறிஸ்தவ பிள்ளைகள் என்பவர்கள் யார்? பெயரளவில் கிறிஸ்தவர்களாக இருப்பவர்கள் எல்லாம் கிறிஸ்தவர்கள் இல்லை. பெயரளவில் கிறிஸ்தவர்களாக இருந்துக்கொண்டு எல்லா உலகப் பிரகாரமான காரியங்களாகிய, புகைத்தல், குடித்தல், இன்னும் அநேக உலக சிற்றின்பங்களுக்கும் அடிமையாகி கிறிஸ்துவையும் வணங்குகிறேன் என்று சொல்லுபவர்கள் எல்லாம் கிறிஸ்தவர்கள் அல்ல. வேதம் சொல்லுகிறது பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக ராஜ்ஜியத்தில் பிரவேசிப்பானேயல்லாமல் என்னை நோக்கி கர்த்தாவே கர்த்தாவே என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை. *(மத்தேய 7:21)* அப்படியென்றால் யார் அவருடைய பிள்ளைகள்? வெறும் வார்த்தையோடு நின்று விடாமல் அவரில் நிலைத்திருப்பவர்களே! அவருடைய பிள்ளைகளாயிருக்கிறார்கள். கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திராமல் மீறி நடக்கிற எவனும் தேவனை உடையவனல்ல கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருக்கிறவனே பிதாவையும், குமாரனையும் உடையவன் *(2 யோவான் 9)*.

இப்படியாக அவருடைய உபதேசத்தில் நிலைத்திருப்பவர்களுக்காக, கிறிஸ்து பிதாவினிடத்தில் பரிந்துப் பேசுகிறார். பிதாவினிடத்தில் பிரிந்து பேசும் அளவிற்கு அவர் யார்? அவர் ஏன் பரிந்து பேச வேண்டும் என்று பார்ப்போம். இயேசுகிறிஸ்து இவ்வுலகில் மனிதனாக இருந்தப்பொழுது அவருடைய சீஷர்களுக்காகவும், மற்றெல்லாருக்காகவும் ஜெபம் செய்தார். கிறிஸ்து அவருடைய சீஷர்களையும், மற்ற மனிதர்களையும் மிகவும் நேசித்தார். அவர்கள் எல்லா தீமைக்கும் விலகியிருக்க வேண்டுமென்று விரும்பினார். இப்பொழுது அவர் பரலோகத்திலிருக்கிற பிதாவினிடத்தில் இருக்கிறார். ஆனாலும் அவருடைய பிள்ளைகளுக்காக தொடர்ந்து பரிந்து பேசுகிறார். ஏனென்றால் கிறிஸ்து இவ்வுலகத்தின் இரட்சகர். நம்முடைய இரட்கராகிய இயேசு கிறிஸ்து பிரசன்னமானதினாலே அந்தக்கிருபை இப்பொழுது வெளிப்படுத்தப்பட்டது. அவர் மரணத்தை பரிகரித்து ஜீவனையும் அழியாமைமையும் சுவிசேஷத்தினாலே வெளியரங்கமாக்கினார். *(2 தீமத்தேயு 1:10)* கிறிஸ்து பிதாவினுடைய குமாரன். அவரை நாம் விசுவாசிக்க வேண்டும். தேவன் தம்முடைய குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டு போகாமல் நித்திய ஜீவனை அடையும் படிக்கு அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார் (யோவான் 3:16) பிதாவானவர் குமாரனில் அன்பாயிருந்து எல்லாவற்றையும் அவர் கையால் ஒப்புக் கொடுத்திருக்கிறார் (யோவான் 3:35). அவருடைய

நாமத்தினால் பிதாவினிடத்தில் ஜெபம் செய்ய சொல்கிறார். அந்த நாளிலே நீங்கள் என்னிடத்தில் ஒன்றுங்கேட்கமாட்டீர்கள் மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்கிறேன் நீங்கள் என் நாமத்தினாலே பிதாவினிடத்தில் கேட்டுக் கொள்வதெதுவோ அதை அவர் உங்களுக்கு தருவார் (யோவான் 16:23).

அவர் மனிதனாக பூமியில் உலாவிய போது இந்த மனிதர்களை நன்றாகப் புரிந்துக் கொண்டார். கிறிஸ்து மனிதனுடைய இருதயங்களை அறிந்திருக்கிறார். தனது மூலமாக பிதாவினிடத்தில் சேருகிறவர்களுக்கு வேண்டுதல் செய்கிறார். மேலும் தமது மூலமாய் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல் செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவராகையால் அவர்களை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார் (எபிரேயர் 7:25). அவருக்கு, ஏழ்மையும் பசியும் தெரிந்திருந்தது. சோதனையும், சோதனையை சகிப்பதும் அவருக்கு தெரிந்திருந்தது. அவர் மனிதனாக இருந்தகாரனத்தினால் மனிதனுடைய சூழ்நிலைகளை அறிந்திருந்தார். எனவே அவர் எல்லா சூழ்நிலையிலும் சோதிக்கப்பட்டும் பாவம் செய்யாதிருந்தார் (எபிரயர் 4:15).

மேலும் இயேசுகிறிஸ்து நமக்காக பிதாவினிடத்தில் பரிந்துபேசுவதற்கு உரிமையுள்ளவராயிருக்கிறார். காரணம் அவர் மனிதர்களுடைய பாவங்களுக்காக இரத்தம் சிந்தியிருக்கிறார். அந்த இரத்தம் மனித இனம் அனைத்தையும் மீட்டுக்கொள்ளக் கூடியது. "அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மை சுத்திகரிக்கும் (1 யோவான் 1:7). மனித இனம் முழுமைக்கும் அவர் பலியாகியிருக்கிறார். "தேவன் பொருமையாயிருந்த முற்காலத்தில் நடந்த பாவங்களை தாம் பொருத்துக் கொண்டதை குறித்து தம்முடைய நீதியை காண்பிக்கும் பொருட்டாகவும் தாம் நீதியுள்ளவரும் இயேசுவினிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனை நீதிமானாக்குகிறவருமாய் விளங்கும்படி இக்காலத்திலே தமது நீதியை காண்பிக்கும் பொருட்டாகவும், கிறிஸ்து இயேசுவினுடைய இரத்தத்தை பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கும் கிருபாதார பலியாக அவரையே ஏற்படுத்தினார் (ரோமர் 3:25, 26). கிறிஸ்துவினுடைய இரத்தம் ஒப்புரவாக்கக்கூடியது.

முன்னே தூரமாயிருந்த நீங்கள் இப்பொழுது கிறிஸ்து இயேசுவிற்குள் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சமீபமானீர்கள், எப்படியெனில் அவரே நம்முடைய சமாதான காரணமாகி இருகிறத்தாரையும் ஒன்றாக்கி பகையாய் நின்ற பிரிவினையாகிய நடுச்சுவரை தகர்த்து சட்டதிட்டங்களாகிய நியாயப் பிரமாணத்தை தம்முடைய மாமிசத்தினாலே ஒழித்து இருதிறத்தாரையும் தமக்குள்ளாக ஒரே புதிய மனுஷனாகச் சிருஷ்டித்து இப்படி சமாதானம் பண்ணி பகையை சிலுவையினால் கொன்று அதினாலே இருதிறத்தாரையும் ஒரே சரீரமாக தேவனுக்கு ஒப்புரவாக்கினார் (எபேசியர் 2:13-16). கிறிஸ்து உங்கள் ஒவ்வொருவருக்காகவும் பரிந்து பேசுவதற்கு, அவருடைய சத்தியத்திற்கு கீழ்படிந்து அவருடைய பிள்ளைகளாயிருங்கள்.

பெண்கள் பகுதி

# ஜெபம் பண்ணுகிறபோது ஸ்திரீயானவள் தன் தலையை மூடிக்கொள்வது அவசியமா?

## *Is a woman required to cover her Head while praying?*

**Betty Burton Choate**



"ஜெபம் பண்ணுகிற போதாவது, தீர்க்க தரிசனஞ் சொல்லுகிறபோதாவது, தன் தலையை மூடிக்கொண்டிருக்கிற எந்தப் புருஷனும் தன் தலையைக் கனவீனப்படுத்துகிறான். ஜெபம் பண்ணுகிற போதாவது, தீர்க்கதரிசனஞ் செல்லுகிற போதாவது, தன் தலையை மூடிக்கொள்ளாதிருக்கிற எந்த ஸ்திரீயும் தன் தலையைக் கனவீனப்படுத்துகிறாள்; அது அவளுக்குத் தலை சிரைக்கப்பட்டது போலிருக்குமே. ஸ்திரீயானவள் முக்காடிட்டுக் கொள்ளவிட்டால் தலைமையினரையும் கத்தரித்துப் போடக்கடவள்; தலைமயிர் கத்தரிக்கப் படுகிறதும் சிரைக்கப்படுகிறதும் ஸ்திரீக்கு வெட்கமானால் முக்காடிட்டுக் கொண்டிருக்கக் கடவள் புருஷனானவன் தேவனுடைய சாயலும் மகிமையுமாயிருக்கிறபடியால், தன் தலையை மூடிக்கொள்ள வேண்டுவதில்லை; ஸ்திரீனாவள் புருஷனுடைய மகிமையாயிருக்கிறாள் . . .

"புருஷன் மயிரை நீளமாய் வளர்க்கிறது அவனுக்குக் கனவீனமாயிருக்கிறதென்றும், ஸ்திரீ தன் மயிரை நீளமாய் வளர்க்கிறது அவளுக்கு மகிமையாயிருக்கிறதென்றும் சுபாவமே உங்களுக்குப் போதிக்கிறதில்லையா? தலைமயிர் அவளுக்கு (மூடுவது இதற்குப் பதிலாக) முக்காடாகக் கொடுக்கப்பட்டிருக்கிறதே.

தலைமயிரை அலங்கரித்துக் கொள்ளும் முறையானது மனப்பூர்வமாகவும் தனியொருவருடைய உறவுபூர்வமாகவும் ஒரு வெளிப்படையான தோற்றத்தை ஏற்படுத்துகிறது என்பது தேவனுடைய கூற்றுமட்டுமல்ல. எல்லா கலாச்சாரமும் இதே போல் தலைமயிரை பராமரித்துக் கொண்டிருக்கின்றன. ஒருவனுடைய வாழ்க்கைமுறை, நம்பிக்கை, நல்நடத்தைக்குரிய அறநெறி, மற்றும் ஒருவனுடைய மதநம்பிக்கை போன்றவற்றை அறிந்து கொள்வதற்கு பூர்வத்தில் எப்படி தலைமயிரை பேணி வந்திருந்தார்கள் என்ற இந்த பாடத்தின் முக்கியத்துவத்தைப் பற்றி அறிவதற்கு இது ஒரு ஆர்வமிக்க தெளிவான கூற்றாகும்.

- பழைய ஏற்பாடு முழுவதிலும், புதிய ஏற்பாட்டு யூதர்களின் சூழ்நிலையிலும் தலையை 'மூடிக்கொள்ளாதது' என்பது சிரைக்கப்படுதலுக்கு சமமாக எண்ணப்பட்டது லேவியராகமம் 10:1ல், நாதாபும் அபியூவும் அவர்களது பாவத்தினிமித்தம் கொல்லப்பட்ட

போது, தேவன் ஆரோனை துக்கத்தில் அவன் தலையை மூடிக்கொள்ளாதிருக்க அனுமதிக்கவில்லை; அவர்களது வழக்கத்தின்படி அவனது தலைலயை சிரைத்கொள்ளுவதற்கு அவன் அனுமதிக்கப்படவில்லை. யோபு 1:20ல் எழுதப்பட்டுள்ளபடி யோபு தன்னுடைய பிள்ளைகள் கொடுமையான புயல்காற்றினால் கொல்லப்பட்டார்கள் என்ற செய்தியைக் கேட்ட போது, அவன் தனது வஸ்திரங்களைக் கிழித்து தன் தலையை சிரைத்துக் கொண்டான்.

- ரோமாபுரியில் மரித்தவர்களை அடக்கம்பண்ணும் இடமாகிய பூமிக்கடியிலுள்ள நீண்ட தாழ்வாரங்களில் எண்ணற்ற செதுக்கப்பட்டுள்ள சிற்பங்களும், சித்திரங்களும் முதல் நூற்றாண்டு கிறிஸ்தவத்தின் அடையாளமாகயிருக்கிறது. அந்த சித்திரங்கள், அந்நாட்களில் வாழ்ந்த ஸ்திரீகள் சபை ஆராதனைக் கூட்டங்களில் முக்காடிட்டிக் கொண்டதாகச் சுட்டிக்காட்டவில்லை. அவர்களது தலைமயிரே அவர்களது முக்காடாகவும், மகிமையாகவுமிருந்தது.

- இது இடைக்காலம் வரை நீடிக்கவில்லை, ரோம கத்தோலிக்க சபை பெருகத் தொடங்கின போது, அந்த வண்ண ஓவியங்களும், சிற்பங்களும் ஸ்திரீகள் ஆராதனையில் முக்காட்டினால் தலையை மூடிக்கொண்டிருப்பதாக சித்தரிக்கத் தொடங்கின. கத்தோலிக்க மார்க்கத்தினின்று பிரிந்த சில பிரிவினை சபைகளும் இந்த முறைமையை மதசம்பந்தப்பட்ட கட்டளையாக தொடர்ந்து கைக்கொண்டன.

- முதல் நூற்றாண்டில் கொரிந்து பட்டணத்து புறஜாதியானின் கலாச்சாரத்தில், ஸ்திரீகள் . . . . பெண் பூசாரிகளாகவும், மதசம்பந்தப்பட்ட வேசிகளாகவும் - அப்ரோதீத் என்ற பெண் தெய்வத்தை வணங்குகிறவர்களாய் இருந்த போதிலும் அவர்களது தொழிலுக்கு அடையாளமாக தங்களது முடியின் நுனியை கத்தரித்து அல்லது தங்களது தலையை சிரைத்துக் கொண்டார்கள். தன் தலையை மூடிக் கொள்ளாதிருக்கும் இப்படிப்பட்ட வழக்கம் ஒரு கிறிஸ்தவ ஸ்திரீக்கு வெட்கம் நிறைந்ததாக இருந்தது, ஏனென்றால் அவள் அவளைப்பற்றியும் அவளது புருஷனோடுள்ள அவளது உறவுமுறைப்பற்றியும் மற்றவர்களுக்கு உணர்த்தக் கூடியவளாயிருந்தாள்.

- இதற்கு இணையாக இன்றைய நாளில் 'பலபின்னலாக' தலைமயிரைப் பின்னிக் கொள்ளுகிற ஸ்திரீகள் சமுதாயத்தின் கேட்டிற்கு சீரழிவிற்கும் மூலகரனமாயிருக்கிற இவர்களது இப்படிப்பட்டதான மாதிரியில் தங்கள் மயிரைப் பிண்ணிக் கொள்ள துணியும் கிறிஸ்தவ ஸ்திரீகளைப் பற்றி வெட்கமுண்டாகப் பேசப்படும். முடியை ஹிப்பியாக வைத்துக்கொள்ளுகிற முறையும் அதிகாரத்திற்கு எதிரிடையானதாகவும், ஸ்தாபிக்கப்பட்ட ஒழுங்குமுறையைப் புறக்கணிக்கிறதாகவும் இருக்கிற வெளிப்படையான தோற்றத்தை உண்டாக்குகிறது.

- தொடரும்

**தமிழில் : J. குளோரி அர்ஜுனன்**


**ஒரு வழி பாடம் 7ன் விடை : 1.B, 2.C, 3.C, 4.B**

# ஒரு வழி

## மதசம்பந்தமான பாரம்பரியக்கட்டுகள்
## Binding Religious Traditions

**பாடம்-7**

***- Roger Dickson***




ஆவிக்குரியதும் சரீரத்திற்குரியதுமான மரணத்தின் பிரச்சனைக்குத் தீர்வு காணும் பொருட்டுள்ள நமது முயற்சியில், அதிகமான மக்கள் அவர்களது சொந்த மதமுறைமைகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஆனால் இங்கு அநேகர் தங்களையே ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஏனென்றால் அவர்கள், மதச்செயல்பாடுகளை நிறைவேற்றிக் கொண்டிருப்பது தேவனைப் பிரியப்படுத்துகின்றதாக நினைக்கிறார்கள். அநேக நேரங்களில் இந்த மதவைராக்கியமுள்ள மக்கள் தங்கள் வாழ்வில் அநுசரிக்கிற மதச்சடங்குகள் தேவனைப் பிரியப்படுத்துகின்றதாஎன ஒரு போதும் சிந்தித்துப் பார்ப்பதில்லை. ஏனென்றால் அவர்களது மதச்சடங்குகள் அவர்களுக்கு நல்ல உணர்வையும் திருப்தியான மனநிலையையும் கொடுப்பதாகவும், இப்படிப்பட்ட சடங்குகள் தேவனால் கண்டிப்பாக ஏற்றுக் கொள்ளப்படும் எனவும் நினைக்கிறார்கள். **ஆனால் உண்மையென்ன வென்றால் பாவத்திற்குப் பரிகாரம் தேடுவதற்குப் பதிலாக, தேவசித்தத்திற்கு விரோதமாயிருக்கிற தங்களது சொந்த மதக்கற்பனைகளைப் பின்பற்றுவதின் மூலம் உண்மையிலேயே பாவஞ்செய்கின்றனர். அவர்கள் தேவ வார்த்தையின் போதனைகளின்படி அல்லாமல் தங்களது சுய இச்சைகளின்படி ஒரு மதத்தை உருவாக்கியிருக்கிறார்கள்.** இப்படியாக இவர்கள் வேதாகம வழிநடத்துதலை நோக்குவதற்குப் பதிலாக தங்களது சுய மதப்பாரம்பரியங்களை பின்பற்றுவதன் மூலம் தேவனுடைய வார்த்தைக்கு விரோதமாகப் பாவஞ்செய்கிறார்கள்.


தேவன் தமது வார்த்தையில் நாம் என்ன செய்ய வேண்டுமென்று போதித்திருக்கிறாரோ அதைச் செய்யும்படி நம்மேல் கண்டிப்புள்ளவராயிருக்கிறார். இயேசுவின் நாட்களில் யூதர்கள் எதைத் திட்டமாய் செய்தார்களோ அதையே இலட்சக்கணக்கான மக்கள் இன்று செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தேவனுடைய வார்த்தையின்படி நடப்பதற்குப் பதிலாக அவர்களுடைய முற்பிதாக்களின் மதப்பாரம்பரியங்களின் படியே நடந்து கொள்கின்றனர். இயேசு பின்பற்றும்படி கூறின வார்த்தைகள் இதோ இங்கே..

## மாற்கு 7:6-8

"அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக : 'இந்த ஜனங்கள் தங்கள் உதடுகளினால் என்னைக் கனம் பண்ணுகிறார்கள்; அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது என்றும், **மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள் என்றும், எழுதியிருக்கிற பிரகாரம், மாயக்காரராகிய உங்களைக் குறித்து, ஏசாயா நன்றாய்த் தீர்க்கதரிசனம் சொல்லியிருக்கிறான். நீங்கள் தேவனுடைய கட்டளைகளைத் தள்ளிவிட்டு, மனுஷருடைய பாரம்பரியத்தைக் கைக்கொண்டு வருகிறவர்களாய், . . . .".**

*இயேசு, மதப்பாரம்பரியங்களைப் பின்பற்றுகின்ற அவர்களுடைய மதநடவடிக்கைகளை வெளிவேஷம் என்று அழைத்தார்.* இது வெளிவேஷமாகயிருந்தது. ஏனென்றால் தங்களை தேவனுக்கு உகந்தவர்களாக்கிக் கொள்ளும் பொருட்டு அவர்களது சுய மதக்கோட்பாடுகளையும், சடங்காசாரங்களையும் கைக்கொண்டு வந்தார்கள். ஆனால் இவ்விதமான ஆராதனையை வீணான ஆராதனை என அழைத்தார். ஏனென்றால் தேவனைப் பிரியப்படுத்துவதற்கு இது பிரயோஜனமற்ற ஒன்றாயிருக்கிறது. **இது பிரயோஜனமற்ற மார்க்கமாயிருந்தது. ஏனென்றால் அவர்கள் மனிதருடைய கற்பனைகளையே உபதேசங்களாகப் போதித்துக் கொண்டிருந்தார்கள்.**

பாரம்பரியம் போல தோற்றமளிக்கின்ற சில மதப்பாரம்பரியங்கள் தவறானதாயிருக்கவில்லை. **இவ்வாறாக இரட்சிப்பிற்குத் தேவையான ஒன்றைப்போல இவைகள் மனிதனுடைய மனசாட்சியின் மேல் கட்டப்பட்டிருக்கவில்லை.** ஆனபோதிலும், நாம் பாரம்பரியங்களை மதக்கோட்பாடாக இருக்கும்படி உருவாக்கும்போது, இயேசு யூதர்களைப் பார்த்துக் கூறியது போல் நாம் செய்கிறோம். அவர்கள் தங்களது பாரம் பரியங்களைக் கைக்கொள்ளும்படிக்கு தேவனுடைய கட்டளையைத் தள்ளினார்கள். இது தான் மதஉலகில் இன்றைய சோகசம்பவம்.




இன்று உலகமுழுவதிலுமுள்ள மதவைராக்கியமுள்ள மக்கள் தேவனுடைய வார்த்தையைக் கைக்கொள்ளுவதைக் காட்டிலும் அவர்களது மதப் பாரம்பரியங்களைக் கைக்கொள்வதில் மிக ஆர்வமுள்ளவர் களாயிருக்கிறார்கள் என இது காட்டுகிறது. இங்கு இயேசு இப்படிப்பட்ட மக்களுக்கு தொடர்ந்து சொல்கிறார், "நீங்கள் உங்கள் பாரம்பரியத்தைக் கைக்கொள்ளும் படிக்குத் தேவனுடைய கட்டளைகளை வியர்த்தமாக்கினது நன்றாயிருக்கிறது" (மாற்.7:9) இது தேவனுடைய வார்த்தைக்கு நேரான உங்களது செயல்பாடா? நீங்கள் உங்களது மதப்பாரம்பரியங்களைக் கைக்கொள்ளும்படி தேவனுடைய வார்த்தையை தள்ளிவிட விரும்புகின்றீர்களா? நீங்கள் உங்களது மதப்பாரம்பரியங்களைக் கைக்கொள்ளும்படி தேவனுடைய வார்த்தையை ஏற்க மறுக்கிறீர்களா?

நாம் உறுதியாயிருப்போம் இந்தக் காரியம் மிக முக்கியமானதாயிருப்பதால் இயேசு என்ன சொன்னரோ அந்தக் கருத்தை நாம் இழந்து விடக்கூடாது. நமது மதச்சரித்திரத்திலிருந்து வந்ததே மதப்பாரம்பரியங்கள். பாரம்பரியம் என்ற விதத்தில் இக்காரியங்களைச் செய்வது தவறல்ல. ஆனபோதிலும் பாரம்பரியம் என்ற வகையில் செய்யும் வேளையில் செய்யப்பட வேண்டிய ஒரே வழி இது தான் என்ற நிலைமைக்கு சில காரியங்கள் மாறிவிடுகின்றன, பிறகு இது மனிதனுடைய மனசாட்சியின் மேல் கட்டப்பட்ட மதப்பாரம்பரியக் கட்டாக மாறிவிடுகிறது. நமது மதப்பாரம்பரியங்களினால் விசுவாசிகளின் மத்தியில் நாம் பிரிவினையை உண்டாக்குவோமேயானால், பின் இப்படிப்பட்டதான பாரம்பரியம் நமது நினைவில் கட்டப்பட்டவையாகவே இருந்து கொண்டிருக்கிறது. வேறுவிதமாகக் கூறுவோமேயானால், தேவனைப் பிரியப்படுத்தும்படிக்கு பாரம்பரியங்களைக் கைக்கொண்டிருக்க வேண்டும் என நினைத்தால், பிறகு நாம் அவைகளைக் கட்டளையாகக் கொண்டிருக்க எண்ணமுடைய வர்களாய் இருக்கின்றோம் என்று அர்த்தமாகும்.

இவ்விஷயத்தில் தேவனுடைய வார்த்தையிலிருந்து நமது அப்போஸ்தல ஊழியத்தில், பாரம்பரியமானது தேவனுடைய கட்டளைகள் இருக்க வேண்டிய இடத்தைப் பிடிக்க ஆரம்பித்துவிட்டது. இயேசு மாற்கு 7ல் சொல்யிருக்கிறபடி மனிதர்களுடைய கற்பனைகளைக் கோட்பாடுகளாகப் போதிப்பதின் மூலம் நாம் முதலில் தேவனிடமிருந்து இந்த அப்போஸ்தல ஊழிய முறைமையைத் துவக்குகிறோம் (மாற்7:7). பின்பு நமது பாரம்பரியத்தைக் கைக்கொள்ளும் பொருட்டு, "தேவனுடைய கட்டளையைத் தள்ளிவிட்டு" தேவனிடமிருந்து நமது அப்போஸ்தல ஊழியத்தை நாம் தொடருகிறோம். கடைசியாக, நாம் நமது பாரம்பரியங்களைக் கைக்கொள்ளுகிறவர்களாய் தேவனுடைய கட்டளையை வியர்த்தமாக்குகிறோம். (மாற்7:9)

**மதசம்பந்தப்பட்ட பாவத்தினுள்ளே வழுவிப்போதல்**

**மனிதனுடைய பாரம்பரியங்களைப் போதித்தல்** ➜ **பாரம்பரியங்களைக் கைக்கொள்ளும்படி தேவனுடைய கட்டளைகளைத் தள்ளி வைத்தல்** ➜ **பாரம்பரியங்களைக் கைக்கொள்ளும்படி தேவனுடைய கட்டளைகளை வியர்த்தமாக்குதல்**

இந்தச் செயல் உங்களுக்கு நேரிட்டிருக்கிறதா? நேரிட்டிருக்குமானால், பாரம்பரியம் என்பது என்ன என்பதற்கும் தேவனுடைய உண்மையான வார்த்தை என்பது என்ன என்பதற்கும் உள்ள வேறுபாட்டினை பகுத்துணரத் தக்கவர்களாயிருக்கும்படிக்கு தேவனுடைய வார்த்தைக்கு உங்களை அழைப்பதே இப்பாடத்தினுடைய நோக்கமாயிருக்கிறது. நீங்கள் இத்தீர்மானத்தை ஏற்படுத்த வேண்டும். உங்களது வாழ்வில் இதைச் செய்யும்படி உங்களை வேண்டிக்கொள்கிறோம். ஏனென்றால் உங்களது **சுயமதசம்பந்தமப்பட்ட சொல்லில் தேவனது விருப்பத்தைத் தேடும் காரியத்தில் தேவசித்தத்தோடு கூட்டுவது என்பது மிக ஆபத்தான ஒன்றாகும்.** இது ஆபத்தானது என்பதற்குரிய காரணம் உங்களது மதமானது மாய்மாலமானதாக

இருக்கலாம். இது பயனற்றதாகவும் இருக்கலாம். இயேசு கூறியவற்றோடு கூட்டுவது அவருடைய நாட்களில் யூதர்கள் செய்த அதே செயலாகும். அவர்கள் அவர்களது மதநடவடிக்கையில் மாய்மாலக்காரராயிருந்தார்கள் **ஏனென்றால் அவர்களது பாரம்பரியத்தைக் கைக்கொள்ளும்படி தேவனுடைய கட்டளையை புறக்கணித்தார்கள்.** இயேசு தம்மை விசுவாசித்த சில யூதர்களுக்கு என்ன கூறினார் என்றும் கவனியுங்கள், ஆனால் அவர்களது விசுவாசம் பலவீனமாயிருந்தது. அது அவரைப் பின்பற்றும்படிக்கு அவர்களது பாரம்பரியங்களை விட்டு விட அவர்களை அனுமதிக்கவில்லை. பின் "இயேசு தம்மை விசுவாசித்த யூதர்களை நோக்கி : நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள் என்றார்" (யோவா. 8:31). ஆனால் இன்றைய நாளில் அநேகர் அவரது உபதேசத்தில் நிலைத்திராதது போல அவர்கள் அவரது உபதேசத்தில் நிலைத்திருக்கவில்லை. ஆனபடியினால், இயேசு அந்த யூதர்களுக்கு, "நீங்கள் உங்கள் பிதாவாகிய பிசாசானவனால் உண்டானவர்கள்; உங்கள் பிதாவினுடைய இச்சைகளின்படி செய்ய மனதாயிருக்கிறீர்கள் ...." என்றார் (யோவா. 8:44)

மதசார்பான பாரம்பரியங்களோடு இணைப்பதில், சிலர் தங்களது மனக்கிளர்ச்சியினாலும், உணர்வுகளினாலும் வழிதவறிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தேவவார்த்தைக்குப் பதிலாக மதத்தில் மனக்கிளர்ச்சியான அனுபவங்களை பின்பற்றும்படி தங்களை அடிமைப்படுத்தியிருக்கிறார்கள். முதலில் அவர் செய்வார் என பரிசுத்த ஆவியானவர் ஒரு போதும் சொல்லியிராத காரியங்களை செய்யும்படி பரிசுத்த ஆவியானவர் தங்களை வழிநடத்துகின்றார் என்றும் ஏவுகின்றார் என்றும் சிலர் உரிமை பாராட்டுகிறார்கள்.

**பரிசுத்த ஆவியானவர் நம்வாழ்வில் என்ன செய்வார் என்பதை அறிந்து கொள்ள ஒரே வழி, அவரது கிரியைகளைப் பற்றி வேதாகமத்தில் எழுதும்படிக்கு அவர் பரிசுத்த மனிதர்களை ஏவினார் என்பதை அறிந்து கொள்வதேயாகும்.**

வேதாகமத்தைப் புறக்கணிக்கும் போது சமயங்களானது மனிதனுடைய மனக்கிளர்ச்சிகளையும் உணர்வுகளையும் ஒருங்கிணைக்கிறது, அவைகள் **தன்னையே வஞ்சித்துக்கொள்ள ஒருவனை வழிநடத்துகிறது.** சிந்தியுங்கள் சமயத்தில் மனக்கிளர்ச்சியினால் உண்டாகும் திடநம்பிக்கை உண்மையான இரட்சிப்புக்கு உத்தரவாதமல்ல. தேவனை அறிகிற அறிவைப் பெறாமல் தேவனுக்காக வைராக்கியம் கொள்வது நமது இரட்சிப்பிற்கு ஒரு பயனற்ற மதப்பயிற்சியாகும். (ரோம. 10:2; கலா4:17,18) கொர்நேலியு நற்கிரியைகள் புரிந்த தேவபக்தியுள்ள ஒரு மனிதன் (அப்.10:1,2) ஆனபோதிலும் அவன் இரட்சிக்கப்படுவதற்கு முன் சுவிசேஷத்தை கேட்டு கீழ்படிய வேண்டியவனாயிருந்தான். (அப்.11:1-14) சமாரியா பட்டணத்தில் சீமோன் ஒரு சக்தியுள்ள மதத்தலைவனாகவும் பட்டணத்திலுள்ள ஒவ்வொருவரும் அவனை நம்பக்கூடியவனாகவுமிருந்தான் (அப்.8:9-11) ஆனபோதிலும் அவனும் இரட்சிக்கப்படும்படிக்கு சுவிசேஷத்தைக் கேட்டு கீழ்படிய வேண்டியவனாயிருந்தான் (அப்.8:12,13) இரட்சிக்கப்படும்படிக்கு பக்தியுள்ள ஒப்புக்கொடுத்தலும், விசுவாசமும், தேவன் மேலுள்ள வைராக்கியமும் போதுமானதல்ல ஒருவன் கண்டிப்பாக தேவ வார்த்தைக்குக் கீழ்படிய வேண்டும்.

தேவன் உங்களிடத்தில் எதிர்பார்க்கிறதான வேதாகம ஆராய்ச்சியை நீங்கள் செய்வீர்களானால் நம்பிக்கையுடனிருக்க ஒரே வழியை நீங்கள் அறிந்து கொள்ளக்கூடும். பெரோயா பட்டணத்தாரைப் போலிருங்கள். லூக்கா அவர்களுக்கு எழுதும் போது, "அந்தப் பட்டணத்தார் மனோவாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக் கொண்டு, காரியங்கள் இப்படியிருக்கிறதா என்று தினந்தோறும் வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்த்ததினால், தெசலோனிக்கேயில் உள்ளவர்களைப் பார்க்கிலும் நற்குணசாலிகளாயிருந்தார்கள்" (அப்.17:11)

உங்களது சமய சடங்காசாரங்கள் தேவனுடைய வார்த்தையின் மேல் சார்ந்து உள்ளதா அல்லது மனிதனுடைய கற்பனைகளைச் சார்ந்துள்ளதா என்பதை தீர்மானித்துக் கொள்ளும்படிக்கு தேவனுடைய வார்த்தைகளை ஆராயும்படி உங்களை நாங்கள் அழைக்கின்றோம். பின்வரும் இரு கேள்விகளுடன் உங்களோடு சவால்விட விரும்புகின்றோம். உங்களது இரட்சிப்பிற்கு அவருடைய பரிகாரத்தைப் பற்றின காரியத்தை அறியும்படி நீங்கள் தேவனுக்கு செவிசாய்க்க ஆயத்தமாயிருக்கிறீர்களா அல்லது இல்லையா என்பதை இந்த இரு கேள்விகளுக்குரிய உங்கள் பதில் தீர்மானிக்கும்.

மனித பாரம்பரியங்களின்படி நீங்கள் தேவனை சேவித்து கொண்டிருந்திருக்கிறேன் என்றும் தேவனுடைய வார்த்தையின்படி அல்ல என்றும் நீங்கள் வேதாகமத்தில் கண்டுபிடித்தால், பாவத்திற்கு பரிகாரம் காண நீங்கள் கைக்கொள்ளும்படி வேதாகமத்தில் அறிவுறுத்தியுள் ளவற்றைச் செய்யும்படிக்கு நீங்கள் உங்களது சமய நடவடிக்கைகளை மாற்றிக் கொள்ள ஆயத்தமாயிருக்கின்றீர்களா? - ஆம் /இல்லை.

நீங்கள் தற்போது கைக்கொள்கிறதான சமய பழக்க வழக்கங்களுக்கு மாறான கருத்துக்கள் ஏதேனும் வேதாகமத்தில் நீங்கள் கண்டுபிடித்தால் வேதாகமத்தில் சொல்லியுள்ளபடி செய்ய அதை சரி செய்து கொள்ள நீங்கள் ஆயத்தமாயிருக்கிறீர்களா- ஆம்/இல்லை.

**தற்சோதனை**

1. .................. தேவனுடைய வார்த்தையின் படி அல்லாமல் நமது சுயபாரம் பரியங்களின்படி நாம் தேவனை ஆராதிக்கும் போது, நமது ஆராதனை (A) தேவனைப்பிரியப்படுத்துகின்றது (B) மாய்மாலமாய் உள்ளது (C) தேவவார்த்தையோடுள்ள உடன்படிக்கையாயிருக்கிறது.
2. .............. தங்களது சுய மதப்பாரம்பரியங்களைக் கைக்கொள்ளும்படிக்கு, யூதர்கள் தேவனுடைய வார்த்தையை என்ன செய்தார்கள் (A) படித்தார்கள் (B) கீழ்ப்படிந்தார்கள் (C) புறக்கணித்தார்கள் (வியர்த்தமாக்கினார்கள்)
3. .................. தேவனுடைய வார்த்தையைப் புறக்கணிக்கும்படிக்கு மதசம்பந்தமான பயிற்சியாக யூதர்கள் எவற்றைப் பின்பற்றினார்கள்? (A) சுயக்கட்டளைகளை (B) ரோம கட்டளைகளை (C) மதசம்பந்தமான பாரம்பரியங்களை
4. .............. தேவ வார்த்தையை விட்டு ஒருவன் விழுந்து போனால், அவனது மதசம்பந்தமான நடவடிக்கையின் இறுதி நிலை என்ன (A) தேவ வார்த்தைய கற்றுக் கொள்ளுதல் (B) தேவனுடைய வார்த்தையை புறக்கணித்தல் (C) வேதாகமத்தை படித்தல்

ஆம் / இல்லை — தேவன் உங்களுக்கு தனது கட்டளையைக் கொடுத்திருப்பதினால், இரட்சிப்பின் சுயமுறைமைகளை உருவாக்க நீங்கள் அதிகாரம் பெற்றிருக்கிறீர்கள் என பொருள்படுகிறதா?

**வேதவாசிப்பு** : மத். 15 : 1–9 (ஏசா. 29 : 13); மாற். 7:1–9; ரோம. 1:21–32

**வேதஆராய்ச்சி** : பராம்பரியங்கள் : எபே. 5:6; கொலோ. 2:8, 20–23; 1 தீமோ. 6:20

பாரம்பரியமிக்க சமயங்களின் வஞ்சனை : 2 தெச 2:10–12; 1 தீமோ. 4:1–5; 2 தீமோ. 4:3–5; 2 யோவா. 9:10 தேவனைத் தேடுதல் : மத். 7:7, 8; 11:28, 29; வெளி. 3:20

விடை 12ம் பக்கம் பார்க்கவும்

# தெரிந்து கொள்ளுங்கள்


## கிறிஸ்தவம் ஓர் மேற்கத்திய மார்க்கம் அல்ல



1. கிறிஸ்து கிழக்கில் பிறந்தார்.
பெத்லகேம் அவர் பிறப்பிடம் (மீகா. 5:2; லூம் 2:4–11)
வாழ்ந்து, மரித்து அடக்கம் பண்ணப்பட்டு, உயிர்த்தெழுந்தது ஆசியாவில். பரலோகத்திற்கு ஏறி சென்றதும் ஆசியாவில் (அப். 1:3–9).
2. கிறிஸ்துவின் சபை கிழக்கில் உருவானது.
எருசலேமில் ஆரம்பிக்கப்பட்டது (அப். 2:5: 2:36–47)
ஆசியாவில் பரவியது (அப். 13:14) பின்பு ஐரோப்பா போன்ற மற்ற இடங்களில் பரவியது (அப். 16:28).
3. கிறிஸ்தவ மார்க்கம் ஓர் குறிப்பிட்ட நாட்டாருக்கோ அல்லது குறிப்பிட்ட மக்களுக்கோ சொந்தமானது அல்ல, அது உலகலாவிய ஒன்று.
கிழக்கில் ஆரம்பிக்கப்பட்டு இருந்தும் அது எல்லா மனிதருக்காகவும் எல்லா நாட்டாருக்காகவும் தேவ சித்தத்தின்படி ஆரம்பிக்கப்பட்டது.
எல்லாருக்காகவும் கிறிஸ்து மரித்தார் (எபி. 2:9; யோவான். 3:16).
உலகமெங்கும் போய் சுவிசேஷத்தை பிரசங்கியுங்கள் என்று கட்டளையிட்டார் (மாற். 16:15, 16)
ஓர் குறிப்பிட்ட பரிசுத்த ஸ்தலத்தை பார்க்கவேண்டும் அல்லது அங்கு போய் தொழுது கொள்ள வேண்டும் என்ற நிபந்தனை கிடையாது (யோவா 4:20–24; மத் 28:5,6).
4. மெய்யான கிறிஸ்தவம், எல்லா மக்களும் தேவனின் பார்வையில் சமமாய் உள்ளனர் என்று கூறுகிறது.
தேவன் பட்சபாதம் உள்ளவர் அல்ல (அப். 10:34).
யாவரையும் தேவன் ஏற்றுக் கொள்ளுகிறார் (வெளி 22:17; கலா 3:27, 28; அப். 10:28–55).
5. மெய்யான கிறிஸ்தவத்தினால் மனிதர்களும், நாடுகளும் உயர்த்தப்படுகின்றார்கள்.
மகிழ்ச்சியான வாழ்வுக்கும், ஸ்திரமான குடும்பங்களுக்கும், நாட்டின் நல்ல குடி மக்களாய் இருப்பதற்கும், அடித்தளமாக அமைகிறது.
நாடும், வீடும், தொழிலும் வளர உதவி புரிகிறது (1 தீமோ 2:1–3).
"அன்றியும், தேவபக்திக்குரிய இரகசியமானது யாவரும் ஒப்புக்கொள்ளுகிறபடியே மகாமேன்மையுள்ளது. தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார், ஆவியிலே நீதியுள்ளவரென்று விளங்கப்பட்டார். தேவதூதர்களால் காணப்பட்டார், புறஜாதிகளிடத்தில் பிரசங்கிக்கப்பட்டார், உலகத்திலே விசுவாசிக்கப்பட்டார், மகிமையிலே ஏறெடுத்துக் கொள்ளப்பட்டார்" (1 தீமோ 3:16).

*- Selected*

# கிறிஸ்துவுக்குள் ஒப்புரவாகுதல்!




Dillard Thurman

பொருள் : கிறிஸ்து எல்லாவற்றுக்கும் மேலானவர்
ஆக்கியோன் : தெரியவில்லை
காலம் : கி.பி. 70

**திட்டவரைக் குறிப்பு :**

A. கிறிஸ்துவானவர் தூதர்கள், தீர்க்கதரிசிகளை விட மேலானவர் 1:1-2:18
B. கிறிஸ்துவானவர் மோசே, யோசுவா போன்றவர்களை விட மேலானவர் 3:1-4:16
C. கிறிஸ்துவானவர் பழைய ஏற்பாட்டு ஆசாரியர்களை விட மேலானவர் 5:1-8:5
D. கிறிஸ்துவின் புது உடன்படிக்கை மேலானது.
E. கிறிஸ்து அருளும் விசுவாசத்தின் மேன்மை

**சிறப்புச் செய்தி :**

| | | |
|---|---|---|
| ஆனபடியினால் | பயந்திருக்கக்கடவோம் | 4:1 |
| " | ஜாக்கிரதையாய் இருக்கக்கடவோம் | 4:1 |
| " | அறிக்கையை பற்றிக்கொண்டிருக்கக் கடவோம் | 4:14 |
| " | கிருபாசனத்தண்டை சேரக்கடவோம் | 4:16 |
| " | பூரணராகும்படி கடந்து போவோம் | 6:1 |
| " | நெருங்கிச் சேருவோம் | 10:22 |
| " | அறிக்கையில் அசைவில்லாமல் இருப்போம் | 10:23 |
| " | பாரமான யாவற்றையும் தள்ளிவிடுவோம் | 12:1 |
| " | பொறுமையாக ஓடக்கடவோம் | 12:1 |
| " | கிருபையைப் பற்றிக் கொள்ளக்கடவோம் | 12:28 |
| " | அவரிடத்திற்கு போகக் கடவோம் | 13:13 |
| " | உதடுகளின் கனியை ஏறெடுப்போம் | 13:15 |

**வரலாற்று பின்னணி :**

யூதர்கள் இயேசுவின் இரத்தப்பலியை தங்கள்மேல் ஏற்றுக் கொண்டார்கள் (மத்.27:25) அந்தோ அவர்கள் சொல்லொனா துன்பம் அடைந்தார்கள். கி.பி. 70ல் எருசலேம் தேவாலயத்தில் ஒட்டு மொத்தமாய் நசுக்கப்பட்ட யூதர்களின் இரத்தம் நிற்கும் நிலையில் இருக்கும் குதிரையின் மூக்கு அளவுக்கு இரத்தம் பெருக்கெடுத்து ஓடியது என்று வரலாற்று ஆசிரியர் "ஜோசிபஸ்" எழுதுகிறார். சிதறடிக்கப்பட்ட யூதர்கள் உபத்திரவத்திற்கு பயந்து கொண்டு கிறிஸ்தவத்தில் தற்காலிகமாக இணைந்தனர். யூதமார்க்கத்திலிருந்து கிறிஸ்தவ மார்க்கத்திற்கு வந்தவர்களுக்கு மோசேயின் நியாயப் பிரமாணமாகிய பழைய ஏற்பாட்டிற்கும் புது உடன்படிக்கைக்கும் உள்ள வித்தியாசங்களை தெரிந்து கொண்டு பரிபூரணமாய் வாழுங்கள் என அழைக்கிறார் எபிரெய புத்தக ஆசிரியர் (எபி 6:1). **இப்புத்தக ஆசிரியர் யார்? பவுல், அப்பொல்லோ, பர்னபா, கிலோமந்து இவர்களில் யாராவது ஒருவராக இருக்கலாம்.**

*– Selected*

**ஜெபியுங்கள்**

1. பத்திரிகை பதிவு சம்பந்தமாக இது, முதலாவது இதழாக வெளியிடப்படுகிறது.
2. சுகவீனமாய் இருக்கிற நமது பத்திரிகை வாசகர்களுக்காக.
3. நமது இதழை அச்சிட்டு கொடுக்கின்ற அச்சகத்தாருக்காக.

## வேத அறிவுப் போட்டி எண். 4

**குறிப்பு :**

வேத அறிவுப் போட்டியில் கலந்து கொள்ளும் ஒவ்வொருவரும் அஞ்சல் அட்டையில் கீழ்கண்ட கேள்விகளுக்கு வேத வசன ஆதாரத்துடன் விடைகளை இம்மாதம் இறுதிக்குள் எழுதி அனுப்புங்கள். அத்துடன் உங்கள் பதிவெண்ணையும் மறக்காமல் எழுதுங்கள். 12 போட்டியில் வெற்றி பெற்று முதலாவது வருபவருக்கு சிறப்பான பரிசு காத்திருக்கிறது. தயவு செய்து உங்கள் சுயமுயற்சியில் கண்டு பிடியுங்கள்.

1. கர்த்தர் ஒரு தீர்க்கதரிசியைக் கொண்டு இஸ்ரவேலை எதிலிருந்து புறப்படப் பண்ணினார்?
2. சிங்கத்தின் வாயிலிருந்தும் நான் இரட்சிக்கப்பட்டேன் என்று யார் யாருக்கு எழுதுவது?
3. கர்த்தருடைய வழி எதிலும் எதிலும் இருக்கிறது?
4. எங்கிருந்து வேதமும், எங்கிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும் என்று தீர்க்கதரிசி கூறுகிறார்?
5. மனந்திரும்புதலும், பாவமன்னிப்பும் எங்கு தொடங்கிச் சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியது?
6. எவர்களுடைய ஜெபத்தை அலட்சியம் பண்ணாமல், அவர்கள் விண்ணப்பத்தை அங்கீகரிப்பார்?
7. ஓய்வுநாளுக்கு முன்னே எருசலேமின் பட்டணவாசலில், மாலைமயங்கும் போது, கதவுகளைப் பூட்டவும், ஓய்வுநாள் முடியுமட்டும் அவைகளைத் திறவாதிக்கவும் கட்டளையிட்டவன் யார்?
8. வெள்ளையடிக்கப்பட்ட சுவரே, தேவன் உம்மை அடிப்பார் என்று பிரதான ஆசாரியனுக்கு மறுமொழி கொடுத்த அப்போஸ்தலன் யார்?
9. பரிசுத்த ஸ்தலத்திலும், மனுஷரால் அல்ல, கர்த்தரால் ஸ்தாபிக்கப்பட்ட மெய்யான கூடாரத்திலும் ஆசாரிய ஊழியஞ் செய்கிறவருமாயிருக்கிற பிரதான ஆசாரியர் யார்?
10. பவுல் யாருடைய தாயை எனக்கும் தாயாகிய அவனுடைய தாயையும் வாழ்த்துங்கள் என்று எழுதுகிறார்?

## நடப்புச் செய்திகள்

1. *எம்.பி., க்களின் மாதச்சம்பளத்தை மூம்மடங்கு உயர்த்தி, ரூ.12 ஆயிரமாக வழங்க பார்லிமென்ட் துணைக்குழு பரிந்துரை செய்துள்ளது.*
2. *செவ்வாய்கிரக ஆய்வுக்கு 16 வயதுக்குட்பட்ட குட்டி விஞ்ஞானிகளை ஏற்படுத்த 'நாஸா' முடிவு செய்தது, உலகம் முழுவதும் 44 நாடுகளில் 10,000 குட்டி விஞ்ஞானிகளிடம் போட்டி நடத்தி 9 பேரைத் தேர்வு செய்தனர். அவர்களில் 3 பேர் இந்தியர்கள்.*
3. *தேனி மாவட்டத்தில் ரூ.1.96 கோடி செலவில் விளையாட்டு அரங்கம் கட்டுவதற்கான ஆரம்பப் பணிகள் துவக்கப்பட்டுள்ளது.*
4. *தொலை பேசி பதிவு செய்யும் கட்டணம் நவம்பர் முதல் தேதியிலிருந்து குறைக்கப்படும் என்றும், வரும் ஜனவரி மாதத்திலிருந்து செல் போன் அறிமுகப்படுத்தப்படும் என்றும் மத்திய தொலைபேசி மந்திரி தெரிவித் துள்ளார்.*
5. *பெண்களுக்கான கிராண்ட் பிரிக்ஸ் டென்னிஸ் போட்டியில் முதல் நிலை வீராங்கனை மார்டினா ஹிங்கிஸ் சாம்பியன் பட்டத்தை வென்றார்.*

Printed by V.D. Thankachan and published and owned by B. Arjunan and printed at Novelty Press, 3. Dhanappa Mudali street, Madurai-625 001. and Published from 17.2.102D/5, Rajan Nagar, Batlagundu - 624 202. **Editor B. Arjunan.**

எங்களோடு சேர்ந்து தேவனை ஆராதிக்க அன்புடன் அழைக்கிறோம்.



ஞாயிறு ஆராதனை : காலை 9.00 மணி

வியாழன் வேதவகுப்பு : மாலை 6.00 மணி


**All are Welcome**

**கிறிஸ்துவின் சபை**
17.2.102-D/5, ராஜன் நகர்
வத்தலக்குண்டு – 624 202.
திண்டுக்கல் மாவட்டம்
✆ : (04543) 23278

**Editor**
**THE WORD OF CHRIST**
Post Box No.5,
Batlagundu-624 202.

**Monthly Magazine**

**FOR FREE DISTRIBUTION ONLY**



# HEAR THE VOICE OF TRUTH

## ON RADIO SRILANKA ALL INDIA SERVICE

| LANGUAGE | DAY'S | TIME | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| **HINDI** | Sunday<br>Thursday | 8.45 p.m 9.00 p.m<br>9.00 p.m 9.15 p.m | Box. 3815<br>New Delhi - 110 049 | SUNNY DAVID |
| **ENGLISH** | Friday | 7.45 p.m 8.00 p.m | Box. 3815<br>New Delhi - 110 049 | J.C. CHOATE |
| **TELUGU** | Sun,Mon<br>Tue,Thu | 2.00 p.m 2.15 p.m | Box. 80<br>Kakinada - 533 001 | JOSHUA GOOTAM |
| **TAMIL** | Sunday,<br>Tuesday,<br>Thursday<br>Friday | 6.45 p.m 7.00 p.m<br>5.30 p.m 5.45 p.m<br>5.45 p.m 6.00 p.m<br>5.30 p.m 5.45 p.m | Box. 8405<br>Bangalore - 560 084 | P.R. SWAMY |
| **MALAYALAM** | Friday | 3.45 p.m 4.00 p.m | Sunny Meads Lane,<br>Behind Sanskrit College,<br>Trivandrum - 695 034 | P.K. VARGHESE |
| **KANNADA** | Sunday | 1.45 p.m 2.00 p.m | 3/5, 7th A Main, Tatasilk Farm<br>Bangalore - 560028 | ROBERT RATHNAKAR |

Please write to these addresses for Bible Correspondence Course, Magazines and other Christian Literature in Language

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST